# வாகன நிறுத்த அபராதங்கள்

சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்

நடப்பு முதல் 30 ஜூன் 2025 வரை

*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*

## வாகனம் நிறுத்தக்கூடாத பகுதிகள் *ஆஸ்திரேலிய சாலை விதி* - 168


எங்கு *வாகனம் நிறுத்தக்கூடாது* என்ற குறிப்பலகைகள் உள்ளனவோ, பயணிகளை அல்லது பொருட்களை இறக்குகின்ற அல்லது ஏற்றுகின்ற நோக்கத்திற்காக உங்கள் வாகனத்தை நிறுத்த உங்களுக்கு அதிகாரம் உள்ளது. உங்கள் வாகனத்தை **2 நிமிடங்களுக்கு** மேல் நிறுத்தக்கூடாது மற்றும் எந்தச் சமயத்திலும் ஓட்டுனர் வாகனத்தைவிட்டு **3 மீட்டருக்கும்** அதிகமான தொலைவில் இருக்கக்கூடாது.

இப்பகுதியில் வாகனத்தை நிறுத்துவதற்கு அனுமதியில்லை.

சில வாகனம் நிறுத்தக்கூடாத பகுதிகள், வேறுபட்ட பணி நேரங்களைக் கொண்டுள்ளன. இது, காண்பிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நேரங்களுக்குள் மட்டுமே வாகன நிறுத்தத்திற்கான கட்டுப்பாடுகள் பொருந்தும் என்பதைக் குறிக்கிறது.

நிறுத்துதல், வாகனம் நகராவிட்டாலும், எஞ்சின் தொடர்ந்து ஓடிக் கொண்டிருத்தல் ஆகியவற்றை இது உள்ளடக்கியது.

**அபராதம்: $136 முதல்**
**பள்ளிப் பகுதிக்கான அபராதம்: $215 + 2 குற்றப் புள்ளிகள்**




## நிறுத்தக்கூடாத பகுதிகள் *ஆஸ்திரேலிய சாலை விதி* - 167

எங்கு *வாகனம் நிறுத்தக்கூடாது* என்ற குறிப்பலகைகள் உள்ளனவோ, குறிக்கப்பட்ட பகுதிக்குள் உங்கள் வாகனத்தை நீங்கள் நிறுத்தவோ அல்லது நிறுத்திவைக்கவோ கூடாது.

நிறுத்துதல், வாகனம் நகராவிட்டாலும், எஞ்சின் தொடர்ந்து ஓடிக் கொண்டிருத்தல் ஆகியவற்றை இது உள்ளடக்கியது.

**அபராதம்: $302 முதல்**
**பள்ளிப் பகுதிக்கான அபராதம்: $410 + 2 குற்றப் புள்ளிகள்**



## பாதசாரி கடக்குமிடங்கள் *ஆஸ்திரேலிய சாலை விதி* - 171-173

எந்த நேரத்திலும், பாதசாரி கடக்குமிடத்தில் அல்லது அதற்கு அருகில் நீங்கள் வாகனத்தை நிறுத்தி வைக்கவோ அல்லது நிறுத்தவோ கூடாது.

நிறுத்துதல், வாகனம் நகராவிட்டாலும், எஞ்சின் தொடர்ந்து ஓடிக் கொண்டிருத்தல் ஆகியவற்றை இது உள்ளடக்கியது.

**அபராதம்: $410 முதல் + 1 குற்றப் புள்ளி**
**பள்ளிப் பகுதிக்கான அபராதம்: $544 + 2 குற்றப் புள்ளிகள்**



## சாலை சந்திப்புகள் *ஆஸ்திரேலிய சாலை விதி* - 171-173

சாலை சந்திப்பு ஒன்றில், ஒரு சாலைக் குறியீட்டுப் பலகை உங்களை நிறுத்தி வைக்க அனுமதித்தாலன்றி, போக்குவரத்து விளக்குகள் உள்ள ஒரு சாலை சந்திப்பில் 20 மீட்டருக்குள்ளாக, அல்லது ஒரு சுற்றுப்பாதை உள்ள அல்லது போக்குவரத்து விளக்குகள் இல்லாத சாலை சந்திப்பின் 10 மீட்டருக்குள்ளாக, உங்கள் வாகனத்தை நீங்கள் நிறுத்தவோ அல்லது நிறுத்தி வைக்கவோ கூடாது.

நிறுத்துதல், வாகனம் நகராவிட்டாலும், எஞ்சின் தொடர்ந்து ஓடிக் கொண்டிருத்தல் ஆகியவற்றை இது உள்ளடக்கியது.

**அபராதம்: $410 முதல் + 1 குற்றப் புள்ளி**
**பள்ளிப் பகுதிக்கான அபராதம்: $544 + 2 குற்றப் புள்ளிகள்**



## பேருந்து பகுதிகள் *ஆஸ்திரேலிய சாலை விதி* - 195

ஒரு பேருந்து பகுதிக்குள் உங்கள் வாகனத்தை நீங்கள் நிறுத்தவோ அல்லது நிறுத்தி வைக்கவோ கூடாது. சில பேருந்து பகுதிகள், வேறுபட்ட பணி நேரங்களைக் கொண்டிருக்கலாம். இது, காண்பிக்கப்பட்டுள்ள ஒதுக்கப்பட்ட நேரங்களுக்குள் மட்டுமே வாகன நிறுத்தத்திற்கான கட்டுப்பாடுகள் பொருந்தும் என்பதைக் குறிக்கிறது.

நிறுத்துதல், வாகனம் நகராவிட்டாலும், எஞ்சின் தொடர்ந்து ஓடிக் கொண்டிருத்தல் ஆகியவற்றை இது உள்ளடக்கியது.

**அபராதம்: $302 முதல்**
**பள்ளிப் பகுதிக்கான அபராதம்: $410 + 2 குற்றப் புள்ளிகள்**

CUMBERLAND CITY COUNCIL

# வாகன நிறுத்த அபராதங்கள்

## சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்

நடப்பு முதல் 30 ஜூன் 2025 வரை

*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*

### இரட்டை வாகன நிறுத்தம் *ஆஸ்திரேலிய சாலை விதி - 189*

சாலை ஓரத்தில் ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ள வாகனம் ஒன்றின் பக்கவாட்டில் உங்கள் வாகனத்தை நீங்கள் நிறுத்தி வைக்கக் கூடாது.

நிறுத்துதல், வாகனம் நகராவிட்டாலும், எஞ்சின் தொடர்ந்து ஓடிக் கொண்டிருத்தல் ஆகியவற்றை இது உள்ளடக்கியது.

**அபராதம்:** $320 முதல்

**பள்ளிப் பகுதிக்கான அபராதம்:** $410 + 2 குற்றப் புள்ளிகள்



### நடைபாதைகள் மற்றும் இயற்கைத் தடங்கள்
*ஆஸ்திரேலிய சாலை விதி - 197*

பாதசாரிகள் மற்றும்/அல்லது சைககிள்களுக்கு இடையூறு ஏற்படும் என்பதால், இரண்டு சக்கரங்கள் இயற்கை தடத்தின் மீது ஏறியிருக்கும் வண்ணம் அல்லது நடைபாதையின் குறுக்கே அல்லது அதன் மீது உங்கள் வாகனத்தை நீங்கள் நிறுத்தக்கூடாது.

நிறுத்துதல், வாகனம் நகராவிட்டாலும், எஞ்சின் தொடர்ந்து ஓடிக் கொண்டிருத்தல் ஆகியவற்றை இது உள்ளடக்கியது.

**அபராதம்:** $302 முதல்

**பள்ளிப் பகுதிக்கான அபராதம்:** $387 + 2 குற்றப் புள்ளிகள்



### வாகனப்பாதைகள் *ஆஸ்திரேலிய சாலை விதி - 198*

வளாகத்திற்குள்ளே வருகின்ற அல்லது வெளியே செல்கின்ற வாகனங்களுக்கு இடையூறு ஏற்படும் என்பதால், வாகனப்பாதையின் குறுக்கே அல்லது அதன் மீது உங்கள் வாகனத்தை நீங்கள் நிறுத்தக்கூடாது.

இங்கு, பயணிகளை அல்லது பொருட்களை இறக்குகின்ற அல்லது ஏற்றுகின்ற நோக்கத்திற்காக உங்கள் வாகனத்தை நிறுத்த உங்களுக்கு அதிகாரம் உள்ளது.

**அபராதம்:** $320 முதல்

**பள்ளிப் பகுதிக்கான அபராதம்:** $387 + 2 குற்றப் புள்ளிகள்



### ஊனமுற்றோர் வாகன நிறுத்தப் பகுதி

உங்களிடம் நடப்பிலுள்ள ஒரு **மொபிலிட்டி பார்க்கிங் ஸ்கீம்** (MPS) அட்டை காட்சிப்படுத்தப்பட்டு, நீங்கள் குறைபாடுள்ள ஒரு நபரை ஏற்றிச் சென்று கொண்டிருந்தாலன்றி, *ஊனமுற்றோர் வாகன நிறுத்தம்* என்ற குறிப்பலகை உள்ள எந்தப் பகுதியிலும் உங்கள் வாகனத்தை நீங்கள் நிறுத்தவோ அல்லது நிறுத்தி வைக்கவோ கூடாது.

**அபராதம்:** $682 முதல்



### தொடர் மஞ்சள் கோடு

சாலையோரம் தொடர்ச்சியாக மஞ்சள் கோடு தீட்டப்பட்டுள்ள எந்தச் சாலையிலும் உங்கள் வாகனத்தை நீங்கள் நிறுத்தவோ அல்லது நிறுத்தி வைக்கவோ கூடாது.

**அபராதம்:** $302 முதல்



# மொபைல் ஃபோன் பயன்பாடு

## சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்

நடப்பு முதல் 30 ஜூன் 2025 வரை

*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*

## மொபைல் ஃபோன் பயன்பாடு *ஆஸ்திரேலிய சாலை விதி - 300*




### கற்பவர், P1 மற்றும் P2 உரிமம் வைத்திருப்பவர்கள்:

வாகனம் நிறுத்தப்பட்டு, எஞ்சின் முழுமையாக அணைக்கப்பட்டிருந்தாலன்றி, எந்தச் சூழ்நிலையிலும் மொபைல் ஃபோன் பயன்படுத்த அனுமதியில்லை – இதில், வரைபடப் பயன்பாடுகளை உபயோகித்தல் மற்றும் போக்குவரத்து விளக்குகளுக்காக காத்திருக்கின்ற, எஞ்சினை ஓடவிட்டவாறே நிறுத்திவைத்துள்ள அல்லது போக்குவரத்து நெரிசலில் சிக்கியிருக்கின்ற சமயங்களும் அடங்கும்.

ஃபோனை ஒரு பயணியிடம் கொடுப்பது தவிர, அதை எப்படி பிடித்திருந்தாலும், அது சட்டவிரோதமானது.

**அபராதம்: $410 + 5 குற்றப் புள்ளிகள்**
**பள்ளிப் பகுதிக்கான அபராதம்: $514 + 5 குற்றப் புள்ளிகள்**

### முழு உரிமம் வைத்திருப்பவர்கள்:

ப்ளூடூத் அல்லது ஹேன்ட்ஸ்ஃப்ரீ பயன்முறைகள் மூலம் இணைக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டால் மட்டுமே மொபைல் ஃபோனை உபயோகிக்க அனுமதிக்கப்படும்.

செய்திகள்/மின்னஞ்சல்கள் (உரை அல்லது ஆடியோ) அனுப்ப அல்லது பெற, ஒரு அழைப்பு செய்ய அல்லது பெற அல்லது புகைப்படங்கள்/வீடியோக்கள் எடுப்பதற்காக ஃபோனை பிடித்துக் கொண்டிருப்பது அனுமதிக்கப்படமாட்டாது.


ஒரு கிரேடிலில் பொருத்தப்பட்டு (வாகனத்துடன் இணைக்கப்பட்ட நிலையில், ஓட்டுனர் சாலையைப் பார்ப்பதை மறைக்காமல்), முழுமையாக ஹேன்ட்ஸ்ஃப்ரீ பயன்முறையில் இயக்கப்படுவதாக இருந்தால், மொபைல் ஃபோன்களை உபயோகிக்கலாம்.



**அபராதம்: $387 + 5 குற்றப் புள்ளிகள்**
**பள்ளிப் பகுதிக்கான அபராதம்: $514 + 5 குற்றப் புள்ளிகள்**

*கவனத்திற்கு: மொபைல் ஃபோன்களை சட்டப்படி பயன்படுத்துவதும் கவனச்சிதறலை ஏற்படுத்தலாம்*






# போதையின் தாக்கத்துடன் ஓட்டுதல் (DUI)

## சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்

*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*

### போதைமருந்துகள் மற்றும் மதுபானம்

சாலையோர காவல்துறை பரிசோதனை ஒன்றின் மூலம் உங்கள் உடலில் உள்ள மது மற்றும் போதைப்பொருளைக் கண்டுபிடித்துவிட முடியும்.

**மதுபானம்:**

நீங்கள் எவ்வளவு மது அருந்தியிருக்கிறீர்கள் என்பதை பொறுத்து, நீங்கள் கடைசியாக மது அருந்திய 12 மணி நேரத்திற்குப் பிறகுகூட 0.02 அல்லது 0.03 இரத்த மதுபான இருப்பினை நீங்கள் கொண்டிருக்கக்கூடும்.

**கஞ்சா:**

நீங்கள் முதல் முறையாகப் பயன்படுத்தியிருந்தால் கூட, நீங்கள் கடைசியாகப் புகைத்தபின் 30 நாட்கள் வரை அதனைக் கண்டுபிடித்துவிட முடியும்.

பின்வரும் பொருட்களை, நீங்கள் கடைசியாகப் பயன்படுத்திய பின் 5 நாட்கள் வரை கண்டுபிடித்துவிட முடியும்:

- மனஊக்கிகள் [Amphetamines]
- எக்ஸ்டஸி [Ecstasy]
- கொக்கேன் [Cocaine]
- அபின் [Heroin]

### தொடர்பற்ற சுவாச மற்றும் போதைமருந்து சோதனை

தொடர்பற்ற சுவாச சோதனை (RBT) அல்லது நகரும் போதைமருந்து சோதனை (MDT) ஒன்றிற்காக எந்தவொரு வாகன ஓட்டுனரையும் நிறுத்தும் அதிகாரம் காவல்துறைக்கு உள்ளது. பின்வரும் நிலைகளில்கூட விபத்தில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து ஓட்டுனர்களையும் காவல்துறை பரிசோதிக்கும்:

- வாகனத்தை இழுத்துச் செல்ல வேண்டியிருத்தல்,
- ஒருவருக்குக் காயம் ஏற்பட்டிருத்தல், அல்லது
- ஓட்டுனர் மது அல்லது போதைப்பொருளால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றினால்.

விபத்தில் உங்கள் தவறு இல்லாவிட்டாலும்:

- விபத்து நடந்த இடத்தில் மதுவுக்காக நீங்கள் சோதிக்கப்படுவீர்கள்.
- நீங்கள் போதைமருந்தின் தாக்கத்தில் இருப்பதாக அவர்கள் சந்தேகித்தால், போதைமருந்து சோதனையின் பொருட்டு நீங்கள் கைது செய்யப்படுவீர்கள்.
- நீங்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் பட்சத்தில், மது மற்றும் போதைமருந்துகளுக்கான இரத்தப் பரிசோதனைகள் உங்களுக்கு மேற்கொள்ளப்படும்.

விபத்தில் உங்கள் தவறு இல்லாவிட்டாலும், விபத்திற்குப்பின் மது அல்லது போதைப்பொருள் உள்ளதாக உங்கள் பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டால், விபத்திற்கான இழப்பீட்டை உங்கள் காப்பீடு **செலுத்தாது** மற்றும் அதனை நீங்கள்தான் செலுத்த வேண்டும்.

### DUI = குற்றப் பதிவு


குடித்துவிட்டு ஓட்டியதற்காக அல்லது போதைமருந்தின் ஆதிக்கத்தில் ஓட்டியதற்காக தண்டனை பெறுவது, குறைந்தது அடுத்த 5 ஆண்டுகளுக்காவது உங்கள் வாழ்க்கையைப் பாதிக்கும். பெரும்பாலும் அது ஒன்றுதான் கீழ்க்கண்டவற்றை நீங்கள் பெறுவதைத் தடுக்கக்கூடியதாகவும் இருக்கும்:

- உங்களுடைய அடுத்த வேலை வாய்ப்பு (அல்லது உங்களுடைய தற்போதைய வேலையைத் தக்கவைத்துக் கொள்வதையும் கூட).
- உங்கள் கார், வீடு மற்றும் உள்ளிருக்கும் பொருட்களுக்கான காப்பீடு.
- வாடகை வீட்டுவசதி.
- தனிநபர் கடன்.
- உங்கள் அடுத்த விடுமுறைக்கான பயண விசா.

### உங்களுக்குத் தெரியுமா?

போக்குவரத்துக் குற்றங்களுக்கு, இளம் குற்றவாளிகள் சட்டம் (1997) பொருந்தாது.

போக்குவரத்துக் குற்றங்களில், நீதிமன்றங்களில் 16 வயதுடைய கற்கும் ஓட்டுனர்கள்கூட வயதுவந்தோராகக் கருதப்படுகின்றனர்.



# சட்டவிரோத U-திருப்பங்கள்

## சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்


நடப்பு முதல் 30 ஜூன் 2025 வரை


*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*


### சட்டவிரோத *U*-திருப்பம் *ஆஸ்திரேலிய சாலை விதி* - 132 (2A)

பின்வரும் பகுதிகளில் U-திருப்பம் செய்தால், $410 **அபராதம் + 3 குற்றப் புள்ளிகள்** விதிக்கப்படலாம்:

- ஓர் ஒற்றைத் தொடர் கோடு சாலையைப் பிரிக்கும் இடங்களில்.
- விட்டுவிட்டு உள்ள பிரிக்கும் கோட்டிற்கு இடதுபுறமாக ஓர் ஒற்றை பிரிக்கும் கோடு காணப்படும் இடங்களில்.
- இரண்டு இணையான தொடர் பிரிக்கும் கோடுகள் காணப்படும் இடங்களில்.







### U-திருப்பக் குற்றங்கள் *ஆஸ்திரேலிய சாலை விதி* - 37-42

இதர U-திருப்பக் குற்றங்கள் மற்றும் அபராதங்கள் வருமாறு:

| குற்றத்தின் வர்ணனை | அபராதம் + குற்றப் புள்ளிகள் | பள்ளிப் பகுதி அபராதம் + குற்றப் புள்ளிகள் |
|---|---|---|
| எதிரே வருகின்ற போக்குவரத்தைப் பார்க்காமலேயே U-திருப்பத்தை தொடங்குதல் | $302 + 2 குபு | $387 + 3 குபு |
| போக்குவரத்திற்கு இடையூறாக இல்லாமல், பாதுகாப்பாக ஓட்டுனர் U-திருப்பத்தைத் தொடங்காதிருத்தல் | $320 + 2 குபு | $410 + 3 குபு |
| வாகனம்/பாதசாரிக்கு வழிவிடாமல் U-திருப்பத்தைச் செய்தல் | $387 + 2 குபு | $514 + 4 குபு |
| குறிப்பலகைக்கு எதிரான முறையில், பிரிக்கின்ற தடத்திலுள்ள இடைவெளியில் U-திருப்பத்தைச் செய்தல் | $302 + 2 குபு | $410 + 3 குபு |
| குறிப்பலகைக்கு எதிரான முறையில், சாலையின் நீளத்தில் U-திருப்பத்தைச் செய்தல் | $320 + 2 குபு | $387 + 3 குபு |
| போக்குவரத்து விளக்குகள் உள்ள சாலை சந்திப்பில் U-திருப்பத்தைச் செய்தல் | $320 + 2 குபு | $410 + 3 குபு |
| குறிப்பலகைக்கு எதிரான முறையில், சாலை சந்திப்பில் (விளக்குகள் அற்ற) U-திருப்பத்தைச் செய்தல் | $302 + 2 குபு | $387 + 3 குபு |
| பிரிக்கும் கோடு/மையத் தடத்திற்கு மிக அருகிலுள்ள தடத்தில் U-திருப்பத்தைத் தொடங்காதிருத்தல் | $320 + 2 குபு | $410 + 3 குபு |
| சாலை மையத்தின் இடது புறத்திலிருந்து U-திருப்பத்தைத் தொடங்காதிருத்தல் | $320 + 2 குபு | $387 + 3 குபு |

CUMBERLAND CITY COUNCIL

# பின் தொடரும் தூரம்

## சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்

*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*

### போதிய இடைவெளி விடுதல்

மோதலைத் தவிர்ப்பதை நீங்கள் எதிர்நோக்கும் பட்சத்தில், ஓட்டும்போது அல்லது பயணம் செய்யும்போது எதிரே என்ன உள்ளதென்று நீங்கள் பார்க்க வேண்டும்.


சுமாராக 3 ல் 1 மோதல் விபத்துகள், மிக நெருக்கமாச் செல்வதால் ஏற்படுகின்றன. பின்தொடரும் தூரத்தை “3 நொடி இடைவெளியுடன்” ஓட்டுவது, முன்னே இருப்பதை நீங்கள் பார்க்க முடிவதையும், இன்னொரு வாகனத்தின் பின்புறத்தில் இடித்துவிடாமல் தடுப்பதையும் உறுதி செய்வதற்கான ஒரு நல்ல வழியாகும்.

உதாரணமாக, ஒரு குழந்தை ஒரு பந்தினை துரத்திக் கொண்டு சாலைக்கு வந்துவிட்டால், என்ன நடக்கிறதென்று புரிந்து கொண்டு, ஆக்ஸலரேட்டரிலிருந்து உங்கள் காலை எடுப்பதற்கு உங்களுக்கு குறைந்தது 1 முழு நொடி ஆகும். அப்போதுதான் உங்களால் பிரேக்கை அழுத்தி, வேகத்தைக் குறைக்கத் தொடங்க முடியும்.

பிரேக் பெடல் மீது உங்கள் காலை வைப்பதற்கு முன் பல்வேறு வேகங்களில் நீங்கள் எவ்வளவு தூரம் பயணம் செய்வீர்கள் – மற்றும் அதன்பின் முழுமையாக நிற்பதற்கு அது எவ்வளவு தூரம் உங்களைக் கொண்டு செல்லும் என்பதை பின்வரும் வரைபடம் காட்டுகிறது.

கீழேயுள்ள முதல் கணக்கீடு, மணிக்கு 50 கிமீ வேகத்துடன், உலர்வான சாலையில், 1.5 நொடிகளில் எதிர்செயலாற்றும் நேரத்தைக் கொண்ட ஓட்டுனருடன், நல்ல பிரேக்குகள் மற்றும் சக்கரங்கள் கொண்ட ஒரு நவீன வாகனத்திற்கானது. மேலும் ஒப்பீட்டிற்காக, உலர்ந்த மற்றும் ஈரமான சாலைகளில், மணிக்கு 50 மற்றும் 100 கிமீ வேகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

*குறிப்பு: கணக்கீடுகள், ஆஸ்திரேலிய போக்குவரத்து பாதுகாப்பு வாரியத்தின்படி, வழிகாட்டலுக்காக மட்டுமே.*




| மணிக்கு கிமீ | எதிர்ச்செயல் தூரம் | பிரேக் போடும் தூரம் | மொத்த மீ |
|---|---|---|---|
| 50 | 21மீ | 12ம | 33 |
| 50 ஈரம் | 21ம | 20ம | 41 |
| 100 | 42ம | 49ம | 81 |
| 100 ஈரம் | 42ம | 79ம | 121 |

மணிக்கு 50 கிமீ வேகத்தில் ஓட்டும்போது, உங்கள் வாகனம் ஒவ்வொரு நொடியும் 13.9 மீ நகர்கிறது. ஒரு சராசரி ஓட்டுனரின் எதிர்ச்செயல் நேரமான 1.5 நொடிகளுடன், மணிக்கு 50 கிமீ வேகத்தில் ஓட்டும்போது, அபாயத்தில் எதிர்ச்செயலாற்றுகையில் நீங்கள் 21மீ பயணித்திருப்பீர்கள் (மேலே காட்டப்பட்டுள்ள முதல் உதாரணம்). இதன் காரணமாகவே, ஓர் அவசர நிலையில் நிறுத்துவதற்கு, 3 நொடி பின்தொடரும் தூரம் அவசியமானது. பருவநிலையானது உலர்விலிருந்து ஈரத்திற்கு மாறும் பட்சத்தில், நீங்கள் இன்னும் அதிகமாக தொடரும் தூரம் விட வேண்டியிருக்கும்.

### பொதுவான நீதிமன்ற நடைமுறை:

பின்புற மோதல்களில் தவறு செய்கின்ற ஓட்டுனர், சூழ்நிலைக்கு ஏற்றவாறு அவருடைய வேகம் சரிசெய்யப்படாத காரணத்தால், வழக்கமாக முன்னால் இருக்கும் வாகனத்தின் மீது மோதிவிடுகிறார்.

# மூன்று நொடி விதி

## சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்


*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*

## இவ்விதியை எவ்வாறு பயன்படுத்துவது.

எதிரே, அதாவது, மரம், நிறுத்தப்பட்ட கார், மின்கம்பம் போன்ற நிலையாக உள்ள ஓரிடத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

உங்களுக்கு முன் உள்ள வாகனம் அந்த இடத்தைத் தாண்டிச் செல்லும்போது, எண்ணத் தொடங்கவும்: 1,001 (ஓராயிரத்து ஒன்று), 1,002 (ஓராயிரத்து இரண்டு), 1,003 (ஓராயிரத்து மூன்று).

1,003 என நீங்கள் எண்ணுவதற்கு முன் அந்த இடத்தை நீங்கள் அடைந்துவிட்டால், நீங்கள் **வேகத்தைக் குறைக்க** வேண்டும் ஏனென்றால், முன் உள்ள வாகனத்திற்கு மிக அருகில் சென்று கொண்டிருக்கிறீர்கள்.




பின்வரும் தூரத்துடன் தொடர்புடைய முக்கிய பாதுகாப்புப் பிரச்னை என்னவென்றால், நீங்கள் எதிர்ச்செயலாற்றும்போது, உங்கள் வேகம் மற்றும் நீங்கள் கடக்கும் தூரத்தின் காரணமாக, அந்தக் குறுகிய காலமான 1-2 நொடிகளில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதாகும்.

உங்களுடைய மொத்த நிறுத்துகின்ற தூரத்தை, உண்மையில் நீங்கள் எதிர்ச்செயலாற்றுகின்ற தூரம் மற்றும் பிரேக் போடுகின்ற தூரம் நிர்ணயிக்கின்றது – அதாவது நீங்கள் பிரேக்கை அழுத்தியவுடன், நிற்பதற்காக உங்கள் கார் எடுத்துக் கொள்கின்ற தூரம்.

ஓட்டுனர் நிலைகள், சாலை மற்றும் பருவநிலைகள் மற்றும் வாகன நிலைகளுக்கேற்ப, நிற்கின்ற தூரங்கள் வேறுபடும்.

ஓட்டுனர் எதிர்ச்செயல் நேரம் என்பது, ஓட்டுனர் அபாயத்தைப் பார்ப்பது முதல், அது உடனடி எதிர்செயல் தேவைப்படுகின்ற ஓர் அபாயம் என்பதை அவர் மூளை உணர்ந்து, காலை ஆக்ஸலரேட்டரிலிருந்து பிரேக் பெடலுக்கு நகர்த்துவதற்கு ஆகும் நேரம் வரை கடக்கின்ற காலமாகும் (சுமாராக 1.5 நொடிகள்). பதில்செயல் வேகம் என்பது பல விஷயங்களைச் சார்ந்துள்ளதால், அதற்கு ஒரே, முற்றிலுமான எதிர்ச்செயல் நேர மதிப்பு என்று ஏதுமில்லை.

ஓட்டுனர் (களைப்பு, சோர்வு, உடல்நலமின்மை, குடித்திருத்தல், வயது, பாலினம்), காணும்திறன், நாளின் அந்த குறிப்பிட்ட நேரம், மனச்சுமை, அவசரம், எதிர்பார்ப்பு போன்ற பல அம்சங்களின் அடிப்படையில், எதிர்ச்செயல் நேரமானது, 1 நொடி முதல் 4 நொடிகள் வரை எடுத்துக் கொள்ளலாம்.

**இன்னொரு வாகனத்தின் பின்னால் மிக நெருக்கமாக ஓட்டிச் செல்வதால் பாதுகாப்பாகநிறுத்த முடியாத நிலை** *ஆஸ்திரேலிய சாலை விதி* - 126-127

**அபராதம்: $514 முதல் + 3 குற்றப் புள்ளிகள்**

# வேக மீறலுக்கான அபராதங்கள்

## சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்

அபராதங்கள் முன்னறிவிப்பின்றி மாறுதலுக்குட்பட்டவை.
நடப்பு முதல் 30 ஜூன் 2025 வரை

*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*

## வேக மீறல் குற்றத்திற்கான அபராதங்கள் *ஆஸ்திரேலிய சாலை விதி - 20*

| வரம்புக்கு மேல் மணிக்கு கிமீ வேகம் | அபராதம் மற்றும் குற்றப் புள்ளிகள் | அபராத வகை | பள்ளிப் பகுதி அபராதம் மற்றும் குற்றப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1-10 | $145 + 4குபு | L+P1+P2 உரிமம் * | $238 + 5குபு |
| | $145 + 1குபு | கட்டுப்படுத்தப்படாத உரிமம் | $238 + 2குபு |
| | $429 + 1குபு | >4.5 டோன் GVM டிரக் மற்றும் கோச் | $542 + 2குபு |
| 11-20 | $316 + 4குபு | L+P1+P2 உரிமம் * | $429 + 5குபு |
| | $334 + 3குபு | கட்டுப்படுத்தப்படாத உரிமம் | $405 + 4குபு |
| | $542 + 3குபு | >4.5 டோன் GVM டிரக் மற்றும் கோச் | $715 + 4குபு |
| 21-30 | $574 + 4குபு | L+P1+P2 உரிமம் *<br>கட்டுப்படுத்தப்படாத உரிமம் | $715 + 5குபு |
| | $675 + 4குபு | >4.5 டோன் GVM டிரக் மற்றும் கோச் | $811 + 5குபு |
| 31-45 | $1,097 + 5குபு | L+P1+P2 உரிமம் *<br>கட்டுப்படுத்தப்படாத உரிமம்<br>>4.5 டோன் GVM டிரக் மற்றும் கோச் | $1,384 + 6குபு |
| | $1,718 + 5குபு | >12 டோன் GVM டிரக் மற்றும் கோச் | $1,713 + 6குபு |
| | + உரிமம் இடைக்காலத்தடை = குறைந்தபட்சம் 3 மாதங்கள் | | |
| 45 > | $2,959 + 6குபு | L+P1+P2 உரிமம் *<br>கட்டுப்படுத்தப்படாத உரிமம்<br>>4.5 டோன் GVM டிரக் மற்றும் கோச் | $2,967 + 7குபு |
| | $4,485 + 6குபு | >12டோன் GVM டிரக் மற்றும் கோச் | $4,385 + 7குபு |
| | + உரிமம் இடைக்காலத்தடை = குறைந்தபட்சம் 6 மாதங்கள் | | |

*
- எந்தவொரு வேக மீறல் குற்றத்திற்கும், கற்பவர் மற்றும் P1 பிளேட் ஓட்டுனர்களின் உரிமத்திற்கு குறைந்தது மூன்று மாத இடைக்காலத்தடை விதிக்கப்படும்
- இரண்டாவது வேக மீறல் குற்றத்திற்கு P2 பிளேட் ஓட்டுனர்களின் உரிமத்திற்கு குறைந்தது மூன்று மாத இடைக்காலத்தடை விதிக்கப்படும்
- வேக வரம்பிற்கு மேல், மணிக்கு 30 கிமீ வேகத்திற்கும் அதிகமாகச் செல்கின்ற கற்பவர் மற்றும் தற்காலிக பயணிப்பவர்கள் மற்றும் ஓட்டுனர்கள், தங்கள் உரிமம் உடனடி தடை அல்லது பறிமுதல் செய்யப்படுவதை எதிர்கொள்வர்.



CUMBERLAND CITY COUNCIL

# சீட் பெல்ட் அபராதங்கள் மற்றும் குழந்தை பிணைப்புகள்

## சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்

அபராதங்கள் முன்னறிவிப்பின்றி மாறுதலுக்குட்பட்டவை.
நடப்பு முதல் 30 ஜூன் 2025 வரை

*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*

### சீட் பெல்ட் அபராதங்கள் *ஆஸ்திரேலிய சாலை விதி - 256-267*

| குற்ற வகை | செலுத்துபவர் | அபராதம் + குற்றப் புள்ளிகள் |
|---|---|---|
| ஓட்டுனர் சீட் பெல்ட் அணியாதிருப்பது | ஓட்டுனர் | $387 + 3குபு |
| 1 பயணி சீட் பெல்ட் அணியாதிருப்பது | | $410 + 3குபு |
| 2 பயணிகள் சீட் பெல்ட் அணியாதிருப்பது | | $818 + 6குபு |
| 3 பயணிகள் சீட் பெல்ட் அணியாதிருப்பது | | $1,245 + 6குபு |
| 4 பயணிகள் சீட் பெல்ட் அணியாதிருப்பது | | $1,632 + 6குபு |
| குழந்தை, அதன் வயதிற்கு, ஒப்புதல் பெறாத பிணைப்பை அணிந்திருப்பது | | $387 + 3குபு |
| பயணி சீட் பெல்ட் அணியாதிருப்பது | பயணி (16 வயதிற்கும் அதிகமானவராக இருந்தால்) | $387 |
| பயணி சீட் பெல்ட்டை பகிர்ந்து கொண்டிருப்பது | | $387 |



### 6 மாதங்களுக்கும் குறைவான குழந்தைகள்

**தேவை: பின்புறம் நோக்கியவாறு உள்ள பிணைப்பு**



### 6 மாதங்கள் – 4 வயதான குழந்தைகள்

**தேவை: பின்புறம் அல்லது முன்புறம் நோக்கியவாறு உள்ள பிணைப்பு**



### 4 – 7 வயதான குழந்தைகள்

**தேவை: முன்புறம் நோக்கியவாறு உள்ள பிணைப்பு அல்லது பூஸ்டர் இருக்கை**

- 4 வயதிற்கும் குறைவான குழந்தைகள், இரண்டு அல்லது அதிக வரிசைகள் உள்ள ஒரு வாகனத்தின் முன் இருக்கையில் பயணம் செய்ய முடியாது.
- 4 வயது முதல் 7 வயதிற்குக் குறைவான குழந்தைகள், மற்ற பின் இருக்கைகளில் 7 வயதிற்கும் குறைவான குழந்தைகள், குழந்தை பிணைப்பு அல்லது பூஸ்டர் இருக்கையில் இருந்தாலன்றி, இரண்டு அல்லது அதிக வரிசைகள் உள்ள ஒரு வாகனத்தின் முன் இருக்கையில் பயணம் செய்ய முடியாது.

தன் வயதிற்குப் பொருந்தும் ஓர் ஒப்புதலளிக்கப்பட்ட பிணைப்புடன் ஒரு குழந்தை பயணம் செய்யாவிட்டால், உங்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம்.
**$387 + 3 குற்றப் புள்ளிகள்.**

CUMBERLAND
CITY COUNCIL

# வேகக் கட்டுப்பாடுகள் – பள்ளிப் பகுதிகள்

## சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்

*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*

இதற்குள், நீங்கள் பள்ளிகளைச் சுற்றியுள்ள 'Go 40 For Me' என்ற சாலை குறிப்பலகைகளுக்கு நன்கு பரிச்சயமாகியிருக்க வேண்டும்.

பல ஓட்டுனர்கள் சரியானதையே செய்து, பள்ளிகள் இருக்கும் பகுதிகளில் மணிக்கு 40 கிமீ அல்லது அதற்கும் குறைவான வேகத்திலேயே பயணிக்கின்றனர். இதன் விளைவாக, நமது குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும்போதும், பள்ளியிலிருந்து செல்லும்போதும் பாதுகாப்பாக இருக்கின்றனர்.

**மணிக்கு 40 கிமீ என்ற வேக வரம்பு ஏன்?**

எந்த அளவிற்கு அதிகமான வேகத்தில் நீங்கள் செல்கிறீர்களோ, அந்த அளவிற்கு ஒரு மோதலின்போது அதிகச் சேதம் ஏற்படுகிறது என்பதை தொழில்முறை ஓட்டுனர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட சோதனைகள் நிரூபித்துள்ளன. மணிக்கு 60 கிமீ வேகத்தில் செல்கின்ற வாகனம் ஒன்று மோதும்போது, 15% குழந்தைகள் மட்டுமே உயிர் பிழைக்கின்றனர். மணிக்கு 50 கிமீ வேகத்தில் மோதப்படும்போது, 55% உயிர் பிழைக்கின்றனர். மணிக்கு 40 கிமீ வேகத்தில், 75% குழந்தைகள் உயிர் பிழைக்கின்றனர்.

எந்த அளவிற்கு நீங்கள் மெதுவாகச் செல்கிறீர்களோ, அந்த அளவிற்கு உங்கள் வாகனத்திற்கு முன்னால் ஒரு குழந்தை ஓடி, நடந்து அல்லது தடுமாறி வந்து விட்டால், அது இறப்பதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது.

நிறுத்துவதற்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தின் மீது வேகத்திற்கும் பெரிய தாக்கம் உண்டு. ஒரு குழந்தை சாலையை நோக்கி ஓடினால் அல்லது நிறுத்தப்பட்டுள்ள ஒரு காரின் முன்புறமிருந்து வெளிப்பட்டால், நீங்கள் அதனைப் பார்த்தும் நேரத்திலிருந்து உங்களுக்கு எடுத்துக் கொள்கின்ற குறைந்தபட்ச நிறுத்தும் தூரம்:

- மணிக்கு 18 கிமீ வேகத்தில் நிறுத்துவதற்கு 40 மீட்டர்
- மணிக்கு 27 கிமீ வேகத்தில் நிறுத்துவதற்கு 50 மீட்டர்
- மணிக்கு 39 கிமீ வேகத்தில் நிறுத்துவதற்கு 60 மீட்டர்

உங்கள் பிரேக்குகள் எவ்வளவு நன்றாக இருந்தாலும் சரி – இந்த தூரங்கள் வழக்கமான சாலைகளில் ஓடும் அனைத்து கார்கள் மற்றும் மோட்டார் பைக்குகளுக்கும் பொருந்தும். உங்களுக்கு வழுக்கினாலோ அல்லது உங்கள் சக்கரங்கள் மற்றும் பிரேக்குகள் தேய்ந்திருந்தாலோ, நிற்பதற்கு இன்னும் அதிக நேரம் எடுத்துக் கொள்ளும். எந்த அளவிற்கு நீங்கள் மெதுவாகச் செல்கிறீர்களோ, அந்த அளவிற்கு விரைவாக உங்களால் நிறுத்த முடியும் என்பதை நினைவில் கொள்ளவும்.


நடைபாதை மீது குழந்தைகள் என்ன செய்து கொண்டிருக்கின்றனர் என்பதைக் கவனிக்கவும். காரில் உள்ள ஏதோ ஒன்றினால் உங்களுக்கு கவனச் சிதறல் ஏற்படுமானால், குழந்தை மீது மோதுவதற்கு முன் அவர்களை நீங்கள் பார்க்கக்கூட மாட்டீர்கள்.

ஒரு பள்ளிப் பகுதிக்குள், ஒரு குழந்தை மீது மோதும் வாய்ப்பைத் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கு:

- விழிப்புடன் இருக்கவும்.
- மணிக்கு 40 கிமீ என்ற வேக வரம்பில் அல்லது அதற்கும் கீழே ஓட்டிச் செல்லவும்
- அமைதியாக இருக்கவும், வழுக்கிச் செல்ல வேண்டாம்.
- உங்கள் சக்கரங்கள் அல்லது பிரேக்குகள் நல்ல வேலை செய்கின்ற நிலையில் இருப்பதை உறுதிசெய்யவும்.
- குழந்தைகள் எதிர்பாராததைச் செய்வார்கள் என்பதை எதிர்பார்த்திருக்கவும்.

மெதுவாக மற்றும் கவனத்துடன் ஓட்டுவதன் மூலமும், பிரேக்குகள் மீது உங்கள் பாதத்தை வைத்திருப்பதன் மூலமும், குழந்தைகள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்கு உங்களுக்கு நீங்களே கூடுதல் நேரத்தைக் கொடுப்பதால், யாருக்கும் காயம் ஏற்படாத வகையில் உங்களால் வாகனத்தின் வேகத்தைக் குறைத்துக் கொள்ளவோ அல்லது நிறுத்திவிடவோ முடியும்.



# வேகக் கட்டுப்பாடுகள் – குடியிருப்புப் பகுதிகள்

## சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்

*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*

நவம்பர் 2003 முதல், NSW-ல் உள்ள அனைத்து கட்டப்பட்ட பகுதிகளிலும், நகரப்பகுதி வேக வரம்பு மணிக்கு 50 கிமீ ஆகும்.

குடியிருப்பு வீதிகளில் பல ஓட்டுனர்கள், மணிக்கு 50 கிமீ அல்லது அதற்கும் குறைவான வேகத்தில் பயணம் செய்வது சரியானதே ஆகும்.. துரதிருஷ்டவசமாக, பல குடியிருப்பு வீதிகளில், சில ஓட்டுனர்கள் மணிக்கு 60 கிமீ-க்கும் அதிகமான வேகத்தில் பயணிப்பதை கவுன்சிலின் சோதனைகள் காண்பிக்கின்றன.

**மணிக்கு 50 கிமீ வரம்பு ஏன் உள்ளது?**

நீங்கள் எந்த அளவிற்கு வேகமாகச் செல்கிறீர்களோ, அந்த அளவிற்கு நிற்பதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்வதுடன், ஒரு மோதலின்போது அதிகச் சேதத்தையும் ஏற்படுத்துகிறீர்கள், குறிப்பாக குழந்தைகளுக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கும்.

மணிக்கு 60 கிமீ வேகத்தில் செல்கின்ற வாகனம் ஒன்று மோதும்போது, 15% குழந்தைகள் மட்டுமே உயிர் பிழைக்கின்றனர் என்பதை மோதல் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. மணிக்கு 50 கிமீ வேகத்தில் செல்லும் வாகனம் ஒன்றினால் மோதப்படும்போது, 55% குழந்தைகள் உயிர் பிழைக்கின்றனர்.

எந்த அளவிற்கு நீங்கள் மெதுவாகச் செல்கிறீர்களோ, அந்த அளவிற்கு உங்கள் வாகனத்திற்கு முன்னால் ஒரு குழந்தை ஓடி, நடந்து அல்லது தடுமாறி வந்து விட்டால், அது இறப்பதற்கான வாய்ப்பு குறைவு. இது வயதான பாதசாரிகளுக்கும் முக்கியமானது. பெரும்பாலும், சாலையைக் கடப்பதற்கு அவர்களுக்கு அதிக நேரம் தேவைப்படுகிறது, எனவே, மணிக்கு 50 கிமீ அல்லது அதற்கும் குறைவான வேகத்தில் பயணம் செய்வது, அவர்களுக்கு சாலையைப் பாதுகாப்பாகக் கடப்பதற்கான போதிய நேரத்தை அளிக்கிறது.

சில குடியிருப்பு வீதிகளில், மணிக்கு 50 கிமீ என்ற வேக வரம்பிற்கும் கீழ் பயணம் செய்வது நல்லது, ஏனென்றால், நடைபாதை மற்றும் வாகனப்பாதைகளை நீங்கள் பார்க்க முடியாமல், பெரும்பாலும் மரங்கள், குப்பைக் கலன்கள் அல்லது மற்ற நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களால் மறைக்கப்பட்டிருக்கக்கூடும்.

**வேகம் = தூரம் = நேரம்**

ஓர் அவசரநிலையில் என்ன செய்வதென்று நீங்கள் முடிவு செய்யும்போது, நீங்கள் எந்த அளவிற்கு வேகமாகச் செல்கிறீர்களோ, அந்த அளவிற்கு அதிக தூரம் சென்றிருப்பீர்கள் என்று புவியியல் விதிகள் நிரூபிக்கின்றன. உதாரணமாக, ஒரு குத்துச்செடி, குப்பைக் கலன் அல்லது நிறுத்தப்பட்டுள்ள காரின் பின்னாலிருந்து ஒரு பாதசாரி வெளிப்படுவாரானால், அவரை நீங்கள் பார்த்த நேரத்திலிருந்து, உங்கள் பாதத்தை ஆக்ஸலரேட்டரிலிருந்து தூக்குவதற்கு உங்களுக்கு சுமார் ஒரு நொடி எடுத்துக் கொள்ளும்.

அந்த ஒரு நொடியில், மணிக்கு 50 கிமீ வேகத்தில், நீங்கள் 13.9 மீட்டர் பயணம் செய்திருப்பீர்கள். மணிக்கு 60 கிமீ வேகத்தில், நீங்கள் 16.7 மீட்டர் பயணம் செய்திருப்பீர்கள் – அதாவது, நீங்கள் விழிப்புடனும், ஓட்டுவதில் கவனத்துடன் இருந்தால் மட்டுமே – இந்நிலையில், நீங்கள் இன்னமும் நிறுத்த வேண்டியுள்ளது!

மணிக்கு 50 கிமீ வேகத்தில், நீங்கள் நிறுத்துவதற்கு முன்னர் குறைந்தது இன்னுமொரு 11 மீட்டர் கடந்திருக்கும். அதாவது, அந்நபரைப் பார்த்தவுடன் நிறுத்துவதற்கு 25 மீட்டருக்கும் அதிகமாகிறது. நீங்கள் மணிக்கு 10 கிமீ வேகத்திற்கு கூடுதலாக சென்று கொண்டிருந்தால், நீங்கள் அந்நபரைப் பார்த்த நேரம் முதல் நீங்கள் நிறுத்துவதற்கு முன்னர் நீங்கள் குறைந்தது 32 மீட்டர் பயணம் செய்திருப்பீர்கள். இந்த நேரம் மற்றும் தூரமானது, சாதாரண சாலைகளில், அனைத்து ஓட்டுனர்களுக்கும், பயணிப்பவர்களுக்கும் பொருந்தும்.

எந்த அளவிற்கு நீங்கள் மெதுவாகச் செல்கிறீர்களோ, அந்த அளவிற்கு பாதசாரியைப் பார்த்து நிறுத்துவதற்கு உங்களுக்கு அதிக நேரம் இருக்கும். நடைபாதை மீது பாதசாரிகள், குறிப்பாக குழந்தைகள், என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனிக்கவும். காரில் உள்ள ஏதோ ஒன்றினால் உங்களுக்கு கவனச் சிதறல் ஏற்படுமானால், சிறு குழந்தை மீது மோதுவதற்கு முன் அவர்களை நீங்கள் பார்க்கக்கூட மாட்டீர்கள்.

பாதசாரிகள் மீது மோதிவிடும் வாய்ப்பைத் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கு:

- விழிப்புடன் இருக்கவும் – உங்கள் சுற்றுப்புறங்களை ஆராய்ந்தபடி இருக்கவும்.
- குடியிருப்புப் பகுதிகளில் மணிக்கு 50 கிமீ என்ற வேக வரம்பில் அல்லது அதற்கும் கீழே ஓட்டிச் செல்லவும்
- அமைதியாக இருக்கவும், வழுக்கிச் செல்ல வேண்டாம்.
- உங்கள் சக்கரங்கள் அல்லது பிரேக்குகள் நல்ல வேலை செய்கின்ற நிலையில் இருப்பதை உறுதிசெய்யவும்.
- குழந்தைகள் மற்றும் இதர வாகனங்கள் எதிர்பாராததைச் செய்வார்கள் என்பதை எதிர்பார்த்திருக்கவும்.



# உரிமம் தொடர்பான அபராதங்கள்

## சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்

நடப்பு முதல் 30 ஜூன் 2025 வரை

*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*

### தகுதியிழப்பு செய்யப்பட்ட, ரத்து செய்யப்பட்ட அல்லது இடைக்காலத்தடை செய்யப்பட்ட (இதில் உரிமத்தை மறுப்பதும் அடங்கும்) உரிமத்துடன் ஓட்டுதல் அல்லது பயணம் செய்தல்

| | முதல் குற்றம் | ஐந்து ஆண்டுகளில் இரண்டு அல்லது அதற்கும் அதிகமான குற்றங்கள் |
|---|---|---|
| நீதிமன்றம் விதிக்கும் அபராதம் | $3,300 வரை | $5,500 வரை |
| சிறை தண்டனைக் காலம் | 18 மாதங்கள் வரை | இரண்டு ஆண்டுகள் வரை |
| கூடுதல் உரிமத்திற்கு தகுதியிழப்பு | 12 மாதங்கள் முதல் வரம்பற்றது வரை | இரண்டு ஆண்டுகள் முதல் வரம்பற்றது வரை |
| குறிப்பிட்ட நீதிமன்ற உத்தரவு இல்லாத நிலையில், கூடுதல் உரிமத்திற்கு தகுதியிழப்பு | மூன்று மாதங்கள் | இரண்டு ஆண்டுகள் |

### ஆஸ்திரேலிய உரிமம் வைத்திராமலேயே ஓட்டுதல் அல்லது பயணித்தல்

| | முதல் குற்றம் | ஐந்து ஆண்டுகளில் இரண்டு அல்லது அதற்கும் அதிகமான குற்றங்கள் |
|---|---|---|
| அபராத நோட்டீஸ் | $987 | பொருந்தாது |
| நீதிமன்றம் விதிக்கும் அபராதம் | $2,200 வரை | $3,300 வரை |
| சிறை தண்டனைக் காலம் | பொருந்தாது | 18 மாதங்கள் வரை |
| கூடுதல் உரிமத்திற்கு தகுதியிழப்பு | வரம்பற்றது | குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் |

*ஒருவர் காலாவதியான அயல்நாட்டு உரிமத்துடன் ஓட்டுவாரானால், "ஓட்டுதல் அல்லது பயணித்தல், ஆனால் உரிமம் வைத்திருக்கவில்லை" என்ற குற்றம் பொருந்தும்.*

### காலாவதியான உரிமத்துடன் ஓட்டுதல் அல்லது பயணித்தல்

| | முதல் குற்றம் | ஐந்து ஆண்டுகளில் இரண்டு அல்லது அதற்கும் அதிகமான குற்றங்கள் |
|---|---|---|
| கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் காலாவதியான உரிமம் | $644 | $1,045 |
| கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் முன்னதாக காலாவதியான உரிமம் | $772 | $1,545 |

### நீங்கள் வைத்திருப்பதைவிட உயர் உரிம வகை தேவைப்படும் வாகனம் ஒன்றை ஓட்டிக் கொண்டிருத்தல் அல்லது அதில் பயணித்தல்

| | முதல் குற்றம் | ஐந்து ஆண்டுகளில் இரண்டு அல்லது அதற்கும் அதிகமான குற்றங்கள் |
|---|---|---|
| C, R, LR அல்லது MR வகை உரிமம் | $644 | $987 |
| HR, HC அல்லது MC வகை உரிமம் | $818 | $1,545 |

*உதாரணம்: நீங்கள் மோட்டார் பைக்கில் பயணித்தல், ஆனால் கார் உரிமத்தை மட்டுமே வைத்திருத்தல் – முதல் குற்றம் = $644*

ஒரு வாகனத்தின் உரிமையாளர் என்ற முறையில், உங்கள் வாகனத்தை ஓட்டுகின்ற அல்லது அதில் பயணிக்கின்ற எவரிடமும் சரியான உரிமம் உள்ளதா என்பதையும் நீங்கள் சோதிக்க வேண்டும். குற்றத்தை 'அனுமதித்ததற்காக' அபராதம் செலுத்த வேண்டிய இடருக்கு உங்களை நீங்கள் உட்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்புள்ளது. வழக்கமாக, இந்த அபராதம் ஓட்டுனர் அல்லது பயணிப்பவருக்கான அபராதத்திற்கு நிகரானதாகும்.

அவர்களிடம் உரிமம் இல்லை அல்லது உரிமம் இல்லை என்பது உங்களுக்குத் தெரியாது என்று நீங்கள் கோரும் பட்சத்தில், அவர்களுடைய உரிமத்தை சோதிக்காமல் இருந்ததற்காக உங்களுக்கு ஓர் அபராதம் உரிமம் ($129) விதிக்கப்படலாம்.

# பள்ளிப் பகுதிகளில் பாதுகாப்பு மேற்பார்வை

## சாலை பாதுகாப்பு உண்மை விவரத் தாள்

*மேலும் தகவல்களுக்கு, கவுன்சிலின் சாலை பாதுகாப்பு அலுவலரை 8757 9000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்*

பல ஓட்டுனர்கள், பள்ளிகளைச் சுற்றியுள்ள தங்கள் குழந்தைகளை மேற்பார்வையிடுவதன் மூலம் சரியானதையே செய்கிறார்கள். இதன் விளைவாக, நமது குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும்போதும், பள்ளியிலிருந்து திரும்பும்போதும் பாதுகாப்பாக இருக்கின்றனர்.

பள்ளிப் பகுதிகளில் குழந்தைகளை மேற்பார்வையிடுவது குறித்த ஒரு கையடக்கமான நினைவூட்டலை இந்த தகவல் இதழ் வழங்குகிறது.

**நடைபாதை உள்ள பக்கமே பாதுகாப்பான பக்கமாகும்**

சில பள்ளிகளில் கார் நிறுத்துவதற்கு இடமிருப்பதில்லை, அல்லது அது மிக நெரிசலாக இருப்பதால், அதைப் பயன்படுத்துவதற்கு உங்களுக்கு நேரமில்லாமல் போகலாம். நீங்கள் பாதுகாப்பாகவும், சட்டபூர்வமாகவும் வாகனத்தை நிறுத்தும்வரை உங்கள் குழந்தைகளை வாகனத்திலேயே வைத்திருக்கவும். அவர்கள் வெளியே செல்வதற்கு அல்லது உள்ளே வருவதற்கு நீங்கள் அனுமதிக்கும் முன்னதாக, நடைபாதை அருகே வாகனத்தை நிறுத்தவும்.

**கேட் வரை உங்கள் குழந்தைகளுடனேயே நடந்து செல்லவும்**

அதற்கு சில நிமிடங்களே எடுத்துக் கொள்ளும். சாலையைப் பதுகாப்பாக எவ்வாறு கடக்க வேண்டும் என்று உங்கள் குழந்தைகளுக்கு சொல்லித் தரும் அதே நேரம், காலை மற்றும் மதியங்களில் உங்கள் குழந்தைகளுடன் பள்ளி கேட் வரை மற்றும் கேட்டிலிருந்து நடந்து செல்லவும்.

**சாலையைக் கடப்பதற்கு உங்கள் குழந்தைகளுக்கு உதவவும்**

பள்ளிப் பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கு ஏற்படும் அபாயங்களைப் பற்றி அனைத்து ஓட்டுனர்களும் அறிந்திருப்பதில்லை. பாதசாரி கடக்குமிடம் அல்லது போக்குவரத்து விளக்குகள் உள்ள இடங்களில் சாலையைக் கடப்பதற்கு உங்கள் குழந்தைகளுக்கு உதவவும். அவர்களுடன் நடந்து சென்று, உதாரணத்தின் மூலம் வழிநடத்தவும்.

இவற்றை உங்கள் குழந்தைகளுக்கு சொல்லித் தரவும்:

- சாலையோரத்தில் **நிற்க** வேண்டும்
- அபாயம் உள்ளதா என்று **பார்க்க** வேண்டும்
- அபாயம் உள்ளதா என்று **கேட்க** வேண்டும்
- அபாயம் கடந்து செல்லும்வரை **காத்திருக்க** வேண்டும்

ஏதேனும் ஒரு நாள், உங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்துச் செல்லும்படி அல்லது அங்கிருந்து அழைத்து வரும்படி நீங்கள் வேறு யாரிடமாவது கேட்க வேண்டியிருக்கலாம்.
சாலையைக் கடக்கும்போது, எவ்வாறு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதை உங்கள் குழந்தைகள் அறிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.

